இருக்கின்றேன் நானிங்கு இதங்காற்றை நுகர்கின்றேன்;
இடையறு துயரந்துயிரும் வாழ்கின்றேன் ;
என்கவிதை எழுதுகின்றேன்.
(என் சக்தித்திறனனைத்தும் திரட்டி இதை எழுதுகின்றேன்.)
பொருதுகின்றோம் எதிர்-புதிராய் வாழ்வணங்கும் - யானும்
போராட்டம் புரிகின்றேன் வலிமையெலாம் கொண்டே.

வாழ்வுக்கும் எனக்குமுள்ள சச்சரவால்,
வரையற்ற முடிவுக்கு வருதல் வேண்டாம்;
தாழ்வாக அவனை நான் மதிப்பதில்லை;
தரத்தோடு அவனை நான் மதிப்பதுண்மை.
பாழ்படுத்தும் வாழ்வதனின் கொடுங்கரத்தால்
பாழாகிப் போய்விட யான் ஆனாலும்
வாழ்வணங்கைப் போற்றுவது மட்டும் திண்ணம்;
மடிந்தாலும் வாழ்வணங்கை மறுத்தல் செய்யேன்!

கழுத்தினிலே சுருக்கிட்டு முடிக்கின்றனோம்:
'கணப்பொழுது வாழ்வதற்கு விருப்பமின்னுமுளதோ?'
எழுக்கள் வினா அவ்வாறு எழுப்பிடுவாராயின்:
'சுருதியிலே சுருக்கதனைத் தளர்த்தி விடு' என்பேன்:
எழுப்பிடுவேன் இடியோசை! தயங்கிடேன் யானோ!
'இமைப்பொழுதுங்கணங்காதே! வெறியனே!' என்பேன்.